**26.03.2026**
**MCOP.53/2024**
**எ.ம.சா.1. மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் தான் சாட்சி சொல்ல வந்தேன் என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய வாகனம் ஆய்வுக்கு வரும் போது காவல்துறையின் பரிந்துரை கடிதம் கொண்டுவருவார்கள் என்றால் சரிதான். அந்த வாகனத்தின் உரிமையாளர் அல்லது ஓட்டுநர் அல்லது பொது அதிகாரம் பெற்ற நபர் யாரேனும் ஆய்வுக்கு வரும் போது வாகனத்தின் அசல் ஆவணங்களை கொண்டு வந்து காட்டுவது வழக்கம் என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட ஓட்டுநர் இறந்து விட்டது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வாகனத்தை ஆய்வுக்கு உட்படுத்தும் போது வாகனத்தின் உரிமையாளர் குடும்பத்தினருக்கு தகவல் ஏதேனும் கொடுத்துள்ளீர்களா என்றால் இல்லை. எனது மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் ஓட்டுநர் உரிமம், காப்பீடு மற்றும் வாகன பதிவு சான்று ஆகிய ஆவணங்களை ஆய்வுக்கு கொடுக்கவில்லை என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒரு நபர் தற்காலிக முகவரியை வைத்து இந்தியாவில் எந்த ஒரு மாநிலத்திலும் அருகில் உள்ள ஓட்டுநர் பயிற்சி அலுவலகம் மூலமாக ஓட்டுநர் உரிமம் பெற்றுக்கொள்ளலாம் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் இறந்து போன குறலரசன் என்பவர் தற்காலிக முகவரியை பயன்படுத்தி

ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ளாரா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. விபத்து சமயத்தில் குறளரசனுக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றும், எங்கள் அலுவலகத்தில் சரியாக பார்க்காமல் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அபராதம் செலுத்திய ரசீதியை யாரிடம் கொடுத்துள்ளேன் என்றால் யார் அபராதம் கட்டினார்களோ அவர்களிடம் ரசீதியை கொடுத்துவிடுவோம். நான் சொல்வது போல் எந்த அபராதமும் செலுத்தவில்லை என்றும், ரசீதும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எங்கள் அலுவலகத்தில் உள்ள ஆவணங்களை சரியான முறையில் பரிசீலனை செய்யாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:– இல்லை</u>**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.